
# கண்ணீர் அஞ்சலி



## அமரர் உயர்திரு சின்னத்துரை சிவஞானம்

அன்னையின் மடியில்
**26.02.1938**

ஈசன் கழலில்
**29.06.2001**

## திதி வெண்பா

ஆண்டு விஷு வருடம் அமைந்த பங்குனியில்
பூண்ட பூர்வபக்க தசமிதனில் - மாண்பு
சிவத்தொண்டன் சீரோன் சின்னத்துரை சிவஞானம்
புவித்தொண்டை நீத்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IN MEMORY OF LATE MR. SINNADURAI SIVAGNANAM

"Great men are they who see that spiritual
is stronger than any material force..."
- Hindu Scripture

An ideology that was exemplified by our late Mr. Sinnadurai Sivagnanam. Hinduism teaches us to lead a life of simplicity and devout service to our Lord – Mr. Sivagnanam practiced this throughout his life.

Mr. Sinnadurai Sivagnanam was born 26th February 1938 in Vaddukkoddai, Jaffna, as the youngest son of late Mr. Sittampalam Sinnadurai & Mrs. Sellammah Sittampalam . An active philanthropist, Mr. Sivagnanam was an accomplished community leader with a firm hold on moral value and righteousness. In looking back, he lived a life of selfless service to God and his community.

Mr. Sivagnanam was educated at Skanda Varodaya College, Chunnakam, Jaffna, and later travelled to South India in the early of 1960s to follow higher education at Madras Engineering College where he obtained a diploma in Engineering. Mr. Sivagnanam came to the United Kingdom in 1965 and continued his education at the South East London College where he obtained a Higher National Diploma in Mechanical Engineering. In 1970, he joined British Telecom as a Telecommunication Engineer and worked with them until his retirement 3 years ago.

In 1969 he married Parathi, daughter of late Dr. and Mrs. Saravanamuthu in Malaysia. Mr. Sivagnanam was a devoted husband and father, who was always kind and understanding. His two sons, Suresh and Ramesh, stand testament to a man of the utmost moral integrity – the perfect role model.

Not only a dedicated family man, but also a dedicated community leader, he became the President and a founder member of the South East London Tamil Youth Centre in 1980, a post he distinguished for four years. The suffering of the Tamil people is an emotive issue, which Mr. Sivagnanam held close to his heart. From 1984 to 1988, as the Chairman of the Central British Fund for Tamils (CBF), he dedicated his efforts to helping the needy Tamil people back in Sri Lanka. In 1986, he joined the Tamil Information Centre (TIC), and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was an active member. Later he became the President of the TIC, a position which he held for over 10 years. During this time he actively helped to increase the awareness of the Tamil plight and actively campaigned in U.K., for the well being of Tamils in the U.K.

Mr. Sivagnanam recognised the need to help the Skanda Varodaya college where he had his education back in Jaffna. He became a founder member of the Skanda Varodaya College Old Boys Association in 1987. Since its formation he had actively worked for the benefit of Skanda Varodaya College and had held important positions including Vice President and Assistant Secretary.

Mr. Sivagnanam not only played an active role in the well being of the Tamil people but also of our ancient culture. In 1990, he helped to found the London School of Carnatic Music, where he was President for four years. The community is eternally grateful for his service.

In 1996, he joined the London Sivan Kovil Board of Trustees and actively participated in the management of the London Sivan Kovil Trust (LSKT). In August 1999, he took on the additional responsibility to co-ordinate the entire range of community activities conducted in the London Sivan Centre. In July 2000, he was elected as Secretary for the LSKT, a position that entailed him being responsible for the day to day activities of the LSKT. In carrying out his duties for Lord Shiva he demonstrated bhakthi and dedication. His honesty, approachable nature and devotion will be deeply missed by the London Sivan Kovil Trust, the Kovil staff, and the devotees.

Our deepest sympathy goes to Mr. Sivagnaman's beloved wife Parathi, his two cherished sons, Suresh and Ramesh and his affectionate daughter in law Susanne for whom we will all be praying. We would also like to express our sincerest condolences to Mr. Sivagnanam's extended family and friends. May Lord Shiva guide us all during this sad time.

London Sivan Kovil Trust,
Board of Trustees, Priests, Oothuvar & Staff
4A, Clarendon Rise, Lewisham
London SE13 5ES
Tel: 020 8318 9844

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று வள்ளுவப் பெருந்தகை கூறியது போல அன்பிற்கும் அத்துடன் பண்பிற்கும் உறைவிடமாய் விளங்கியவர் அமரர் சின்னத்துரை சிவஞானம் ஆவர்.

மென்மையான பேச்சு, கண்ணியத்துடன் கட்டுப்பாட்டுடனும் கூடிய கடமை உணர்வு என்பது அன்றிலிருந்து இறுதி வரை அமரர் சிவஞானம் அவர்களுடன் இரண்டறக் கலந்திருந்தது. இவர் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையிலே 26. 02. 1938ம் நாளில் பிறந்தார். இவரது தகப்பனார் அமரர் சிற்றம்பலம் சின்னத்துரை. தாயார் அமரர் சிற்றம்பலம் செல்லம்மா . ஆரம்பத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்றார். அதன் பின்பு இந்தியாவுக்குச் சென்று Madras Engineering College இல் கல்வி கற்று பொறியியலாளர் ஆனார். அதன் பின் 1965ம் ஆண்டு இலண்டன் வந்து இங்கு South East London College இல் தொழில் நுட்ப பொறியியல் துறையில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றார். அதன் பின்பு 1970ம் ஆண்டில் பிரித்தானியா தொலைபேசித் திணைக்களத்தில்(B.T) உயர்பதவி பெற்று இளைப்பாறும் வரை சேவையாற்றினார்.

இவ்வாறான காலத்தில் உத்தியோகத்துறையில் மாத்திரமின்றி சமூகத் தொண்டிலும் மிகவும் ஈடுபாடு கொண்டி ருந்தார். முக்கியமாக தமிழ் மக்களுக்குச் சேவை செய்வதைத் தனது மூச்சாகக் கொண்டிருந்தார். 1983இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் தகவல் நடுவத்தின் (T.I.C) நீண்டகால உறுப்பினரான திரு சிவஞானம் இறைபதம் எய்தும்வரை T.I.C இன் செயற்பாடுகளில் மிகவும் ஆர்வமாகப் பணியாற்றினார். பத்து வருடங்களுக்கு மேலாக T.I.C இன் இயக்குனர் சபைத்தலைவர் பொறுப்பினைத் திறன்படவகித்திருந்தார்.

1980 ஆண்டிலே தென்மேற்கு இலண்டன் தமிழ் இளைஞர் கழகத்தின் தமிழ்ப் பாடசாலையின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். 1984ம் ஆண்டில் மத்திய பிரித்தானியா தமிழர் நிறுவனம் (CBF) அமைப்பில் முக்கியமான ஓர் அங்கத்தவராக கடமையாற்றினார்

1987ம் ஆண்டு தொடக்கம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும் அதன் பின்பு உதவித் தலைவராகவும் பணியாற்றி இறுதிவரை அச்சங்கத்தின் முக்கிய அங்கத்தவராகப் பணிபுரிந்து 1990 ஆம் ஆண்டில் இலண்டன் கர்நாடக இசைப் பள்ளியில் முக்கிய அங்கத்தவராகப் பணியாற்றினார். இவ்வாறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத் தொண்டினைப் புரிந்து தனது திறமையினால் சமூக அமைப்புகளுக்குப் புத்துயிரூட்டினார். இவருக்குச் சமயத்துறையிலிருந்த ஈடுபாடானது வெளிப்படத் தொடங்கிய போது இலண்டன் சிவன் ஆலய பரிபாலன சபை, 1996ம் ஆண்டிலே இவரது சேவையை தன்னுடன் சேர்த்துக் கொண்டது. அத்துடன் சபையின் அங்கத்தவரான இவர் 1999ம் ஆண்டில் சிவன் நிலய பொறுப்பாளராகவும் கடமைபுரிந்தார். அதன்பின் 2000ம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் சிவன் ஆலய பரிபால-னசபையின் செயலாளரானார். அன்று தொடக்கம் இறுதிவரை சிவன் ஆலய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றி, ஆலய வளர்ச்சியின் பொருட்டு தனது நேரத்தைஅர்ப்பணித்தார். தனது உடல் நலன் குன்றிய நிலையிலும் தனது கடமையிலிருந்து தவறாமல் ஆலய பரிபாலனக் கடமைகளை மற்றைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து செவ்வனே நடாத்தினார்.

கடந்த 30 வருடங்களாக தங்கள் மனதிலே இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருந்த அமரர் சி. சிவஞானம் அவர்களது பிரிவினைத் தாங்க முடியாமல் தமிழ் நெஞ்சங்கள் இன்று துயருறுகின்றன. சிவா, சிவா, என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அவர் பரம்பொருளாகிய சிவனது பாதத்திற்குச் சென்று விட்டார். தமது குடும்பத் தலைவனை இழந்து துயருறுகின்ற அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரர் சி. சிவஞானம் அவர்களது ஆத்மா இலண்டன் லூயிஷம் உண்ணாமலை அம்பிகை சமேத ஸ்ரீ அண்ணாமலைப் பெருமானது திருப்பாதக்கமலங்களில் சாந்தி பெற வேண்டும் என எல்லோரும் சேர்த்து பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

இங்ஙனம்
இலண்டன் சிவன் கோயில்
பரிபாலன சபையினர்,
சிவாச்சாரியார்கள்,
ஓதுவார்,
ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

(சிவனது அநாதி முறைமையான பழைமை)

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதர் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானர்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by JR Print Tel:020 8503 6643